பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

★ பொன்னான
★ இந் நந்நாளில்
★ புத்தாடை அணிந்து
★ புதுப்பொலிவு பெற
வாழ்த்துகிறோம்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூ 2/-

தரமான சேட்டிங்
★ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு ஐப்பசி மீ 23 செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ற.அவ்வல் பிறை 27 (08 - 11 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 230

### வெலிக்கடையில் கலகம் செய்த

# சிறைக்கைதிகள் மீது சூடு!

# 12 பேர் பலி! 30பேர் காயம்!




## ஹெலிக்கொப்டரிலிருந்தும் கண்ணீர்ப் புகைக்குண்டு

கொழும்பு, நவம்பர் 8

வெலிக்கடைச் சிறையில் தொடர்ந்து கலகம் செய்த சிறைக்கைதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக பாதுகாப்புப்படையினர் சிறைக்குள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் 12 கைதிகள் உயிரிழந்தனர் அங்கு இடம் பெற்ற சம்பவங்களில் முப்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

தப்பிச் செல்ல முயன்ற கைதிகளைத் தடுத்து நிறுத்துவதற்காக பாதுகாப்புப் படையினர் ஹெலிகொப்டரிலிருந்து கண்ணீர்ப் புகைக்குண்டுப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

கலகம் மேற்கொண்ட சிறைக்கைதிகள் சிறைச்சாலைக் கட்டடத்தைச் சேதப்படுத்தியதுடன் பல கட்டடப் பகுதிகளைத் தீயிட்டனர்.

இதேபோன்ற கலக நடவடிக்கைகள் கண்டி - போகம்பரை, பதுளை, நீர்கொழும்புச் சிறைகளிலும் இடம்பெற்றது.

அரசாங்கம் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரி வெலிக்கடைச் சிறையில் கடந்த நான்கு நாட்களாக ஆயிரத்து 600 சிறைக்கைதிகள் கூண்டுகளை விட்டு வெளியேறி கலக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் பாதுகாப்புப் படையினர் நேற்று வெலிக்கடைச் சிறைக்குள் புகுந்தனர்

கலகம் செய்த சிறைக்கைதிகள் சில சுவரேறி தப்பிச்செல்ல முயற்சித்தனர் என்று சொல்லப்படுகிறது.

அதைத் தடுப்பதற்காக இராணுவப் படையினர் சிறைச்சாலையைச் சுற்றி வளைத்துக் கொண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆவணங்கள் சாம்பர்!

கொழும்பு, நவ. 8

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குக் கைதிகள் தீ மூட்டியதில் முக்கியமான ஆவணங்கள் பல சாம்பராகின என்று அறிவிக்கப்பட்டது.

பல தீயணைப்புப் படை இயந்திரங்கள் பல மணி நேரம் போராடித் தீயை அணைத்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ)

### சுபநேரம்

08 - 11 - 1988
ஐப்பசி 23
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10-35 முதல் 12-05 வரை
ராகுகாலம்:-
3-05 முதல் 4-35 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
தீபாவளி பண்டிகை

## ராஜீவைத் தாக்கியவரும் காயம்

கொழும்பு, நவ 8

இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைத் தாக்கிய கடற்படை வீரரும் நேற்று சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலின் போது காயமடைந்தார் என்று தெரியவருகிறது.

## பெறுபேறுகள் நாளை கிடைக்கும்

யாழ்ப்பாணம் நவ 8

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான ஜீ.சி.ஈ சாதாரணதர விசேட பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தன.

நாளை சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நேற்று கிடைத்ததாகத் தெரியவருகிறது. (ஒ-10)

## அளித்த வாக்குறுதியை ஜே. ஆர். மீறிவிட்டாரார்!

### சிறிமாவோ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 8

நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடுவதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன தன்னிடம் இணக்கம் தெரிவித்திருந்தார் என்றும்—

எனினும் பின்னர் தனக்களித்த வாக்குறுதியை அவர் மீறிவிட்டார் என்றும் சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம்சுமத்தியிருக்கிறார்

அவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு நேற்று கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

"சனிக்கிழமைச் சந்திப்பின்போது நாடாளுமன்றத்தைக் கலைத்து இடைக்கால அரசு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 6 பிக்குகள் கைது!

கொழும்பு, நவ 8

தீவிரவாத சந்தேக நபர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பில் பொலிஸார் ஆறு பௌத்த பிக்குகளைக் கைது செய்தனர்

அவர்களிடம் இருந்து அரசு எதிர்ப்புப்பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது

(உ-எ)

## கொழும்பு நகரம் வெறிச்சோடியது

கொழும்பு. நவ 8

கொழும்பிலுள்ள அலுவலகங்களும், கடைகளும் நேற்று நண்பகல் பன்னிரண்டு மணியளவில் திடீரென்று மூடப்பட்டன.

பொதுமக்கள் அவசரமாக அகப்பட்ட வாகனங்களில் வீடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

கடந்த புதன்கிழமை முதல் போக்குவரத்துச்சபை பஸ்கள் சேவையில் ஈடுபடாத காரணத்தால் தனியார் வாகனங்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது

நேற்று முதல் (திங்கட்கிழமை) தொடர்ந்து மூன்று தினங்களுக்கு வேலை நிறுத்தம் மற்றும் ஹர்த்தால் நடவடிக்கைகளில் ஈடுபடும்படி தென் பகுதி மக்களை, மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி. பி) கேட்டிருந்ததை அடுத்தே கொழும்பில் நண்பகலுடன் கடைகளும் அலுவலகங்களும் திடீரென்று மூடப்பட்டதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன, (ஒ-ஐ)

## அமெரிக்காவில் இன்று ஜனாதிபதித் தேர்தல்

### புஷ்ஷுக்கு வெற்றி வாய்ப்பு

வாஷிங்டன் நவ 8

இன்று அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது

குடியரசுக் கட்சி வேட்பாளராக தற்போதைய உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், ஜனநாயகக் கட்சி வேட்பாளராக மைக்கல் டுகாகிஸ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்

இறுதிக் கருத்துக் கணிப்பின்படி டுகாகிஸுக்கு கடைசி நிமிடத்தில் ஆதரவு பெருகி வருகிறது என்று அறிவிக்கப்பட்டது எனினும் வெற்றி வாய்ப்பு புஷ்ஷுக்கே அதிகமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(உ-எ)

## தொடர்ந்து ஹர்த்தால் நடத்த ஜே. வி. பி. முஸ்தீபு

கொழும்பு நவ. 8

நாடாளுமன்றம் கலைக்கப்படும் வரை தொடர்ந்து தென்னிலங்கையில் வேலை நிறுத்தம் மற்றும் ஹர்த்தால் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜே. வி. பி. இயக்கம் முஸ்தீபு செய்து வருவதாகத் தெரியவருகிறது

இந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக—

அரசு கவிழும் வரை எதிர்ப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடும்படி மக்களைக் கேட்டுக்கொள்ளும் ஒலிபெருக்கிப் பிரசாரம் காலி நகரில் தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்படுவதாக பி.பி.சி வானொலி நேற்றிரவு அறிவித்தது துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன

இதேசமயம் ஹர்த்தால் நடவடிக்கைகள் காரணமாக காலி மாநகரில் தண்ணீர் விநியோகம், மின் விநியோகம் ஆகியவை நேற்று தடைபட்டன

(உ-எ)

## மற்றொரு நாடும் இலங்கைக்கு உதவுமாம்

கொழும்பு நவ 8

நாசகார சக்திகளால் இலங்கைக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் இலங்கைக்கு உதவி செய்வதற்கு இந்தியா அல்லது சார்க் அமைப்பின் ஏனைய நாடுகளில் ஒன்று உடனே உதவிக்கு வரத் தயாராகஇருக்கின்றது

ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன இவ்வாறு கூறினார்

நேற்று முன்தினம் (சனிக்கிழமை) கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கக் கூட்டம் ஒன்றில பேசும் போதே அவர் இப்படிக் கூறினார் அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை அரசாங்கம் சட்ட ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கம். அதை எவராவது கவிழ்க்க முற்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தூரசேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம். நவ 8

வட பிராந்திய போக்குவரத்துச்சபையின் கோண்டாவில் சாலை இன்றுமுதல் வவுனியாவிற்கு அப்பாலான தமது சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

தென்பகுதியில் நிலவும் சூழ்நிலை காரணமாகவே இந்த நடவடிக்கை என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-9)

## கையூம் மீண்டும் பதவி ஏற்பு

மாலே, நவ. 8

ஜனாப் மாமூன் அப்துல் கையூம் மூன்றுவது முறையும் மாலைதீவின் ஜனாதிபதியாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை பதவி ஏற்பார்.

(உ-எ)

## அ'புரம், வவுனியா நகர்களில் சுவரொட்டி

வவுனியா நவ 8

எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன் அனுராதபுரம் பகுதிகளில் வசிக்கும் தமிழ்மக்கள் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று அப்பகுதியில் எச்சரிக்கை சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன அதனையடுத்து சுமார் இருநூறுக்கும் அதிகமான தமிழர்கள் வவுனியாவுக்கு வந்துள்ளனர்

அதுடன் அங்குள்ள முஸ்லிம் மற்றும் சிங்கள வர்த்தகர்கள் தமிழர்களுக்கு பொருள்களையும் உணவுப்பண்டங்களையும் விற்கக்கூடாது என்றும் — மீறி விற்பவர்களுக்கு எதிராகத் தண்டனை வழங்கப்படும் எனவும் சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வவுனியா வந்தவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையில் ஞாயிறு மாலை வவுனியாவில் ஒட்டப்பட்டிருந்த சிங்கள மொழியிலான சுவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 100 இலங்கையர் கைது!

மாலைதீவு நவ 8

மாலைதீவு தலைநகர் மாலையில் வீடுவீடாகச் சோதனை நடைபெற்று வருவதாகவும் அங்கு தங்கியிருந்த நூறு இலங்கையர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (உ)

## சீனாவில் பூகம்பம்! 600 பேர் பலியாகினர்!!

பீகிங், நவ 8

சீனாவின் தென்மேற்கு பகுதியில் - பர்மாவின் எல்லைப்புறத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட பூகம்பத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 600 ஆக உயர்ந்திருப்பதாக பி.பி.சியின் பிந்திய செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது

பூகம்பம் தாக்கிய பிரதேசத்தில் மக்கள் தொகை சுமார் 3 கோடி 50 லட்சம் என்றும் தெரிவிக்கப்பட்டது

(உ-எ)

## கூலிப்படையினருடன் மூன்றுவது கப்பல்!

### இந்தியக் கடற்படை துரத்துகிறது

புதுடில்லி, நவ 8

மாலைதீவில் புரட்சியில் ஈடுபட்ட கூலிப் படையினர் தப்பிச் செல்வதாகக் கருதப்படும் மூன்றுவது கப்பல் ஒன்றையும் இந்தியக் கடற்படையினர் துரத்தி வருவதாக நேற்று இரவு செய்திகள் வெளியாகின.

"புரோகிரஸ் லைட்" என்ற கப்பல் உட்பட

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி




வெலிக்கடை, அநுராதபுரம் நியூஸ். ளைப் பார்த்தா திரும்பவும் எண்பத்திமூன்று ஜூலை எல்லே நினைவுக்கு வருகுது...!

## இலங்கையருக்கு மாலைதீவில் கட்டுப்பாடு

மாலைதீவில் புரட்சி நடத்திய கூலிப்படையினர் மீதான விசாரணை முடியும்வரை அங்கு தொழில் செய்யும் இலங்கையர் மாலைதீவை விட்டு வெளியேற முடியாது.

இப்படியான பணிப்புரை ஒன்று மாலைதீவு அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டிருக்கிறது (உ)

ஷப்ரு நிதி நிறுவனம்



தனது
வாடிக்கையாளர்களுக்கு
தீபாவளி
நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்
கொள்கிறது.

207, மின்சார
நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

### இன்று விடுமுறை

இன்று தீபாவளித் திருநாள் உதயன் சஞ்சிகை அலுவலகப் பணியாளர்களுக்கு விடுமுறை அதனால் நாளை பத்திரிகை வெளிவராது

-நிர்வாகத்தினர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிலமாதங்கள் கையிருப்பில் இல்லாதிருந்த உறுதியானதும் உத்தரவாதமும் உள்ள சிங்கர் மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் 'Singer Water Pump' தற்போது விற்பனைக்கு வந்துவிட்டது. சாமுவேல் சன்ஸ் அன்கோ லிமிட் யாழ்ப்பாணம். (C/744)

திருமண பர்மா தேக்கு மரத்தாலான சல வீட்டுத்தளபாடங்கள் உடனடியாக விற்பனைக்குண்டு தேவைப்படுவோர் 8/11, 9/11, 10/11 தி திகளில் வந்து வாங்கலாம். தொடர்பு: திருமதி M.நவரத்தினம், 26, கனகசபை றோட், மானிப்பாய் (7932)

இந்து நாகரிகத்தில் க.பொ.த A/L, G A Q இராமநாதன் நுண்கலைப் பிரிவுத்தேர்வுகளுக்கான துணை நூல் விலை 19 50 கிடைக்குமிடம்; பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா புத்தகசாலைகள். (7923)

பூனரி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் K K S றோட்டிலிருந்து 20 யார் தூரத்தில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குள்ளது தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: M பரமேஸ்வரி(குய்லா, அனித்தாஸ் கூல, பூனரி மரத்தடி, கொக்குவில். (7931)

10 பற்றி சாச்சர் ஒன்றும் ஒரு பற்றி சாச்சர் ஒன்றும் 4000 W Honda ஜெனரேற்றரும் விற்பனைக்குள்ளது மினிரேட்ஸ் சென்ரர் 3. J M. C. பிளங் ஸ் ரன்வி றோட், யாழ்ப்பாணம். (7930)

உபயோகித்த கட்டில் மெத்தை, செற்றி, மேசைகள், கபேட், Show-case சாப்பாட்டு மேசை, கதிரை, எக்ஸிகியூட்டிவ் Type-writer, கசற்றடியே, கண்ணாடி மேசை Cot மற்றும் பல பொருட்களும் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. Daniel K சபாரத்தினம் 35.1 நாவலர் காலேன் யாழ்ப்பாணம். (7815)

### கோழிக்குஞ்சு விநியோகம

Nallur Farm Centre Pri a Lohman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள் Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், Hy-line கறுப்பு, வெள்ளை, Sitver பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை நல்லூர் (7686)

Christumpu Farm இருந்து Golden Comet பிறவுன் பேட்டுக் குஞ்சுகள் எமது ஸ்தாபனத்தில் 10 11 88 அன்று வெளிவரும். முன்கூட்டியே பதிவுசெய்யவிரும்புபவர்கள் சுஜோஸ், 21, வேம்படி வீதியில் உள்ள எமது காரியாலயத்தில் பதிவு செய்யலாம். முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. தொகையாக வாங்குபவர்களுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும் (C/672)

## தேவை

யாழ் நகரில் சிறிய வீடு (தனி) வாடகைக்கு தேவை. முழு விபரங்களுடன் எழுதவும் தொடர்பு: விளம்பரதாரர். (வீடியோ குணம் அருகாமை) 42/4 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7928)

## தேவை

கொம்பிகல் கட்டுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. அண்மையில் உள்ளவர்களுக்கும், கஷ்டமான குடும்பத்திலிருந்து வருபவருக்கும் முன்னுரிமை வழங்கப்படும் மிக் இன்டஸ்ரீஸ் (Mik Industries) 26 26/1. திருநெல்வேலி, சிவன் புது வீதி யாழ்ப்பாணம் (7642)

### மணமகள் தேவை

சுயமாக விவசாயம் செய்யும்திருமணமாகாத பண்பு நிறைந்த தமிழ்த் தப்பட்ட குலத்தைச் சேர்ந்த 37 வயதுடைய ஆண்மகனுக்கு நற்பண்புள்ள 30 வயதிற்குட்பட்ட மணப்பெண் தேவை. சமயம் சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. புகைப்படத்துடனும் விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். 342 C/o உதயன் (7645)

### German Language-Basic - I

ஆரம்பம் 14- 11- 88. காலம் 6 மாதம்.(பட்டப் படிப்புகளுக்கு பரீட்சை மேற்கு ஜேர்மன் கலாசார நிலையத்தினால் நடத்தப்படும், வசதிக்கு ஏற்ப யாழ்ப்பாணம் அல்லது கொழும்பில் 1ம் தவணைப் பரீட்சை மாசி - 89 ஆசிரியர்:- Mr S B. S ...nayagam Rudicot N... - 3 Kandy Rd, Jaffna. (C/765)

### தீபாவளி பிறந்தநாள் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜுவுளியகம் 146. நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

### இறைச்சிக்கோழி விநியோகம்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எல்லன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

## சேவை

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளை சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ளவும். எலெக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளிநாட்டுக்கடிதங்கள் Bio-Data போன்ற முக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். 'ஷப்ரு' சேவைப் பிரிவு, இல. 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (C/691)

### சமூகக்கல்விப் பயிற்சிகள்

ஆண்டு 11, 10, 9, 8, 7, 6 வகுப்புகளுக்குரிய சமூகக்கல்விப் பயிற்சிகள் வினா விடைகள் வெளிவந்து விட்டன. ஆக்கியோன்: க. குணராசா - எம். ஏ விற்பனையாளர்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (7715)

### றேனியோ

தரமான றேணியோ பிரதிகளை (தமிழ்/ஆங்கிலம்) சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம் "ஷப்ரு" சேவைப் பிரிவு, இல: 19, 2ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (C/692)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hise- Golden omet பிறவுன் சேவற் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், சறுப்பு சேவற் குஞ்சுகள், ப்ரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் விநியோகிக்கப்படும். முன்கூட்டிப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ் பிடியடி லேன், கொக்குவில். (249)

# கொம்பியூட்டர் பயிற்சி

**Basic Programming Course**

புதிய பிரிவு: 12 - 11 - 88

Sat – Sun Bach 8 . 30 a m

**Duration: 2 Months I Witial Fee: 400/-**

★ IBM உட்பட பல சிறப்பான கொம்பியூட்டர்களில் பயிற்சியளிக்கப்பட்டு, அங்கீகாரமுள்ள சான்றிதழ்களும் வழங்கப்படும்.

IDP 342. K K. S Road, (சிவன் கோயிலடி), யாழ்ப்பாணம். (7958)

# ஓராண்டு நினைவஞ்சலி



## வல்லிபுரம் அருணாசலம்

மலர்வு: 10 – 11 – 1912 உதிர்வு: 21 – 10 – 1987

திதி: 8 11 - 88

அரனடியிற் சேர்ந்து
ஆண்டொன்று ஆனாலும்
இன்றும் நாம் இறைஞ்சுகின்றோம்
ஈசனடி சேர்க என்று
உற்றுரை நீ மறந்து
ஊரானரை ஏங்க வைத்து
எந்தை நீ சென்றாயே
ஏங்குகின்றோம் நாமெல்லாம்
ஐயா உனை மறவோம்
ஒரு வருடமல்ல
ஓராயிரம் வருடந்தானும்

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நாச்சிமார் கோவிலடி,
கட்டுவன் தெற்கு, (7809)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சுப்பையா நாகநாதர்

(ஓய்வுபெற்ற பிரதம தபாலதிபர்)

தோற்றம்: 19 - 12 – 1907 மறைவு: 08 – 11 – 1987

அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் எம்மை வளர்த்து ஆளாக்கி குடும்பத்திற்கு மட்டுமன்றி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் வழிகாட்டியாய் வாழ்ந்து, மறைந்து இன்று ஓராண்டு நிறைவடையும் உங்கள் ஆத்மா சாந்திபடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(7954)

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் வைத்திலிங்கம் சண்முகலிங்கம்

(யாழ் போதனா வைத்தியசாலை அம்புலன்ஸ் சாரதி)

தோற்றம்: 31-12-1938 மறைவு: 21-10-1987

திதி: 08-11-1988

குடும்பத்தின் குலவிளக்காய்
கோபுரத்தின் மணிமுடியாய்
சோலையில் பெருமரமாய்
திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
வற்றாத கண்ணீரில் எமை ஆழ்த்தி
வள்ளல் நீங்களோ சென்றுவிட்டீர்கள்
பற்றுள்ள உங்கள் பிள்ளைகள்—
உங்களை எண்ணி
பதைக்குதையா பதறுதையா
கொட்டும் மழையிலும் கூசலின்றி
கடும் வெய்யிலிலும் களைப்பின்றி
கடமையே தெய்வமென செல்வீர்களே
கடமை நேரத்தில் உங்கள் மேல்
காலன் கண் வைத்தானே
மீண்டுமொரு பிறப்பு இருக்குமானால்
மறக்காமல் எங்கள் தெய்வமாய்
மறுக்காமல் வந்திடப்பா!
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.

முருகன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (7811)

# இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



## காசிப்பிள்ளை ஸ்ரீரங்கராசா

பிறப்பு: 23 – 9 - 1952 இறப்பு: 8 – 11 – 1986

எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டு இரண்டு சென்றாலும் ஆறவில்லை எமது மனது. மறவில்லை உனது நினைவு உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா,
அண்ணுமார், தங்கச்சிமார்,

தங்கோடை,
சாரைநகர். (7818)

# ஓராண்டு நினைவஞ்சலி





சுபத்திரை
தோற்றம்: 15. 12. 1939

சிவசோதி
தோற்றம்: 14 0? 1 66

அழிப்பு: 24 10 1987

திதி: 11. 11, 88

ஈசனே இப்படியோர் சோகமோ என்வாழ்வில்
ஆசை மனைவியாள், அரும் புதல்வி
சொல்லாற் சிதறுண்டே சென்றார் சிவலோகம்
சொல்ல மிகுமே துயர்!

கணவன், தந்தை.

அன்பின் சிவசோதி அன்னையுடன் நீயிணைந்து
என்னைவிட்டு சென்றாயே ஏனம்மா - கண்மணியே
காலனைச் செல்வந்து சௌவியதே நின்னுயிரை
ஏலுமோ தாங்கா இயம்பு

கணவன், தந்தை,உற்றார், உறவினர்,

குமரகோட்டம்,
கோண்டாவில். (78?2)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி







செல்வி கமலாம்பிகை செல்லையா
28 - 10 - 1934

திருமதி பத்மினி காந்தகுமாரன்
5 - 11 - 1947

ஜீவித் காந்தகுமாரன்
6 - 6 - 1981

அகால மரணம்: 21— 10 — 1987

திதி: 8 - 11 - 1988

அன்புச் செல்வங்கள் நீங்கள் மூவரும் தாய், கணவர், சகோதரர், சுற்றத்தார், நண்பர்கள், மனங்கலங்க விண்ணுலகு சேர்ந்தீர்களே!
எங்கள் உயிர் உள்ள வரை ஆறாது மனக்கவலை!

உங்கள் ஆத்ம சாந்தி நாளான இன்று உங்களை நினைவு கூருகின்றோம்!
தாய், கணவர், சகோதரர், உறவினர், நண்பர்கள்

C/o R. செல்லையா
8, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7889)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பிதழ்: உதயன் தீபாவளிச் சிறப்பிதழ்


எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்!

**நியூ குகானந்த பவான்**

879, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C/752)


## துன்பம் விலகி இன்புடன் வாழ வழி செய்யும்

## தீபாவளித் திருநாள்

ஒவ்வொரு வருஷமும் இத்தீபத் திருநாளாம் தீபாவளியானது மங்கள ஸ்நானம் செய்து புத்தாடை அணிந்து மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும் ஓர் நன்னாளாகும்.

இந்தப்பண்டிகை தோற்றமாகும் நாளோ இருள் சூழ்ந்தது. அது பிறந்த வரலாறோ விசித்திரமானது. மனித குலமானது தனக்கு எந்த ஓர் அம்சம் இன்றியமையாதது என்று நினைக்கிறதோ அந்தத் தாய் அன்பிலே உருவெடுத்தது இது.

மனிதன் உய்வு பெற எது உன்னதமான உணர்ச்சி என்று கருதுகிறோமோ அந்தத் தியாக புத்தியிலே அவதரித்த பெருமை இதற்குண்டு.

தீமைக்கே இருப்பிடமாக இருந்த நரகாசுரன் ஸ்ரீ கிருஷ்ண பகவானால் வதம் செய்யப்பட்டு உய்வு பெற்றதும் தான் பெற்ற மேன்மை தன்னோடு நிற்கக்கூடாது என்ற நல்ல எண்ணம் ஓங்கப் பெற்றான் தான் இறந்த தினத்தில் எல்லோரும் எண்ணெய் தேய்த்துக் குளித்து, புத்தாடை உடுத்து விருந்து உண்ணவேண்டும் என்று வேண்டிக் கொண்டானும்.

தான் இறந்ததாக அவன் எண்ணவில்லை கடவுளின் பாத கமலங்களில் மீண்டும் பிறந்து விட்டதாகவே அவன் கருதியிருக்கவேண்டும். வாழ்விலே சாவும், சாவிலே வாழ்வும் உலகத்தின் மாயை அல்லவா? அவன் அகங்காரமும் அறியாமையும் ஒழிந்து, பழைய சட்டையைக் களைந்து ஆண்டவன் தரிசனப் பற்றினால் முக்தி அடைந்ததை நாம் கொண்டாடாமல் இருக்கலாமா? இருளிலே சிக்கித் தடுமாறுபவர்களுக்கு விளக்கினால் அல்ல விளக்கு ஆரத்தினால், மத்தாப்பு வாணத்தினால், வெடிகளின் முழக்கத்தினால் ஒளிதந்த பெருந்

**கௌரி நடராசா**

தலையாளாக ஆகிவிட்டான் நரகாசுரன்.

தாயின் தூய அன்பிற்குக் களங்கம் சற்பிக்க யாராலும் முடியாது. புத்திரசோகத்தை விடத் துக்கம் வேறில்லை. அத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நரகாசுரனைப் பெற்ற பூமாதேவி ஆனவள் 'என் பிள்ளை இறந்தாலும் மற்றத் தாய்மார்களின் பிள்ளைகள் சுகம்பெற அருள வேண்டும் இந்நாளைத் திருநாளாகக் கொண்டாட வரமளிக்கவேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டாளாம் அந்த உயர்வு ஒருதாயின் உள்ளத்தில் தான் எழமுடியும்.

இத்தகைய அன்பை நிலைநாட்டவே தீபாவளி தோன்றுகின்றது வருடந்தோறும் சரிய இருளிலே

(6 ஆம் பக்கம் பார்க்க)


அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்களுக்கு

**எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

உங்கள் மங்கள வைபவங்களை

வீடியோப் படமாக்குவதில் நவீன வீடியோ கமறாக்களுடன் புதிய கண்டுபிடிப்பான 'DIGITAL' வீடியோ விஷன் மிக்ஷர் பயன்படுத்தப்படுகிறது.

விபரங்களுக்கு எம்மை நேரில் சந்தியுங்கள்.

மற்றும்
வீடியோக் கமறா. T.V. வீடியோ, டெக் ஆகியவற்றைப் பழுதுபார்த்துக் கொள்ளவும்

எல்லோரும் நாடும் சிறந்த ஸ்தாபனம்:

**எவர் விஷன்**


21 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C 749)



எமது ஸ்தாபனத்துடன் தொடர்புள்ள
மொத்த வியாபாரிகளுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும்,
வாடிக்கையாளர்களுக்கும், மற்றும், நண்பர்களுக்கும்

**தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**




**இனாம்**

அண்ணா கோப்பியின் 100 grm வெற்று பக்கட்டுகளில் 10 கொடுத்து 1 றம்ளரையும் 50 grm வெற்றுப் பக்கட்டுகளில 20 கொடுத்து 1 றம்ளரையும் 25 grm வெற்றுப்பக்கட்டுகளில் 40 கொடுத்து 1 றம்ளரையும் இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்:
கிளை:

**அண்ணா கோப்பிக்கடை**
யாழ்ப்பாணம்.

**அண்ணா தொழிலகம்,**
இணுவில்.

(C/747)



**தீபாவளி வெளியீடு**

1. எங்க ஊரு காவல்காரன் — L P — ECHO - 8000710
2. நாற்காலிக் கனவுகள் — L. P — A V M - 10006068
3. வாம் L P — A V. M 10006068
4. நானே மனிதன் — L P — Nahata P M L - 2007
5. ரத்ததானம் — E. P — Singeetha M K. L - 1060
6. அது அந்தக் காலம் — L. P. — A. V M - 10006065
7. நல்லவன் — L. P — Kalaippuliodio - K I 101
8. விழியோரக் கவிதை — L. P. — Mahapa - T. M. L. 2011
9. கடற்கரை தாகம் — L P — Singeetha - M K. L. 7041
10. நம்ம ஊரு நாயகன் — L. P. — A V M. - 10006022
11. கலியுகம் — L P — Singeetha - M. K L - 7042
12. காளிச்சரன் — L P — Singeetha M K L - 7044
13. வசந்தி L P — A. V M. - 10006066
14. மதுரைக்காரத் தம்பி — L. P — A V M - 10006067
15. இது நம்ம ஆளு — Story L P — Lahari L. F - 4120

**அம்பாள் வீடியோ சென்ரர்**

894, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C/764)



எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது உள்ளங்கனிந்த

'தீபாவளி நல் வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்!

★

**லிங்கம் கூல் பார்**

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

(C/751)



எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு

**தீபாவளி நல்வாழ்த்துக்களைத்**
தெரிவித்துக்கொள்கிறோம்.

★

**மலாயன் கபே**

36, 38, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்.

(C/754)

தொலைபேசி:- இல. 24074, 22091



✝
J. M. J.

பசியும் பிணியும் நீங்கி, வளமும் வாழ்வும் பெற்று அன்பால், பண்பால், அறிவால் இணைந்து வாழ

**இத்தீபாவளித் திருநாளில் வாழ்த்துகின்றோம்.**

உங்கள் பயண அமைப்பாளர் **S. P. ANTON** மகிழ்ச்சியுடன் அறியத்தரும்.

**கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இத்தாலி**

ஆகிய நாடுகளுக்கு எவ்வித இடையூறுமின்றிப் பயணம்மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம்

விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்:

உங்கள் பயண அமைப்பாளர்:

**S. P. ANTON**

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C/750)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரன் (சந்திரன)

தோற்றம்: 27-12-1965 மறைவு: 21 10 1987

திதி சதுர்த்தசி 08 11-1988

பாசத்தின் பண்ணையுமாய்
பண்புகளின் ஆலயமாய்
குலக் கொடிக் கோர்
கொழு கொம்பாய்
எங்கள் நெஞ்செலலாம்
இனித்தவனே
கண்ணெல்லாம்
நிறைநதவனே
'சந்திரன' நீ இல்லாத
நாங்கள்
சந்திரனே
இலலாத வானம்
இருண்டு கிடக்கும் எம்
இதயமெல்லாம் உன் நினைவே
தேயாத சந்திரனாய் நின்று
தேற வைக்கிறது எங்கள்
செல்வமே!

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா
சகோதர, சகோதரிகள,
சிறியதநதையர் சிறியதாய்மார்,
மாமனமார், மாமிமார்,
மச்சாள மச்சான்மார்,
சிநசு நண்பர்கள், உற்றார்,உறவினர்கள்

இணுவில் மேற்கு,
இணுவில் (7744)

## ஓராண்டு நினைவஞ்சலி



### சு. இரவிநாதசர்மா

(அண்ணன்)
உரிமையாளர்
The Unique Accounting Consultants Services Jaffna.

ஆண்டவன் படைப்பு: 31 - 8 - 1957 அழிப்பு: 21 - 10 - 1987

திதி: 8. 11. 1988

கண்ணா! அன்று பஞ்சபாண்டவருக்கு நேர்ந்த துன்பங்களைத் தீர்த்து அரசுரிமையையும் பெற்றுக்கொடுத்தீர்

இன்று இரவிநாதனை (சின்னக்கண்ணனை), எமக்கு மகனாய்ப் பிறந்து வயது முப்பதுள் செயற்கரிய செயல்களைச் செய்தும் எங்களைப்பாதுகாப்பாக இடத்திற் சேர்ததும் அப்பா நீங்கள் பூசைக்கு போகவேண்டாம் நான போய்ப்பார்தது வருகிறேன எனக் கூறி சென்று காலனுக்கு இரையாகி நீர் கடமை முடிந்தது என உணர்த்தி எங்கு சென்றீர். உமது ஆத்மா எட்டுருக்கொண்டவரின் பாதங்களை அடைவதாக.

உமது பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார். உறவினர்.

77/2, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை. (7574)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 - 01 - 1916

மறைவு: 08 - 11 - 1987

### S. R. துரையையா


(இளைப்பாறிய ஆசிரியர்)

எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கும் அன்புத் தெய்வமே! எமக்கெல்லாம் நல்வழிகாட்டி எமது முன்னேற்றத்துக்காய் அரும்பாடுபட்ட தியாகச்சுடரே! மாணவர்க்கு அறிவொளியூட்டிய ஆசானே! உன் அரவணைப்பில் வாழ்ந்திட்ட எம்மையெல்லாம் மீளாத்துயரில் விட்டு நீ கர்த்தரின் அருள் நாடிச் சென்றனையோ! விண்ணுலகடைந்து ஓராண்டு சென்றாலும் உமது பிரிவு எம்மைவிட்டு அகலவில்லையே! அப்பா! உமது நினைவலைகள் எமது நெஞ்சினை விட்டகலா! நின் ஆத்ம சாநதிக்காய் கர்த்தரை வேண்டி நிற்கின்றோம்

மனைவி, பிள்ளைகள்.

சேச் லேன்.
கொக்குவில். (7893)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கந்தையா வேதாரணியம் [ பேபி ]

(யாழ்: போதனா வைத்தியசாலை)

தோற்றம்: 28—01—1960 மறைவு: 21—10—1987

திதி: 08—11—1988

நீண்டுயர் தோற்றமெங்கே
நின்னகை வதனமெங்கே!
தூண்டினிற் புழுவாய் மண்ணில்
துடித்தழ வைத்தாய் என்றும்
ஆண்டொன்று கழிந்திட்டாலும்
அத்துயர் ஆறுதையா
மாண்டனை யிலலை நின்னை
மதியினர் அழித்தார் அந்தோ!
பாசத்தின் திருவிளக்கே!
பண்புறற திருமகனே!
அன்பிற்கோர் சோதரனே!
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புள்ள அப்பா, அம்மா, அண்ணா
அக்கா, மைத்துனர்மார் மருமக்கள்
தம்பிமார், உற்றார், உறவினர், நணபர்கள்

திருநகர்,
கிளிநொச்சி. (7403)

## முதலாம் ஆணடு நினைவஞ்சலி



### திரு சோமசுநதரம யோகசுநதரம்

(முன்னைநாள் தபால் தந்தி ஊழியரும், யோகா மினிபஸ் உரிமையாளரும்)

ஆண்டவன் படைப்பு: 09—11—1952 அழிப்பு: 21 - 10 1987

திதி: 08—11—1988

அன்பின் அடைக்கலமாய்
வாழ்ந்திருந்தாய் நீ
பண்பின் உறைவிடமாய்
உயர்ந்தே நின்றாய்
பாசத்தில் உனக்குநிகர்
நீயே ஆனாய்
ஆண்டொன்று ஓடி
மறைநதிட்டாலும்
ஆறுது எம்துயரம்
மாறுது உம்நினைவு
தித்திக்கும் எம் தேனமுதே
உனக்கு இத்
தீபாவளித் தினமதுதான்
நினைவு நாளானதே!

உமது பிரிவால் துயருறும்:
அன்புப் பெற்றோர் சகோதரர்கள்,
மைத்துனர் மருமக்கள். உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

''யோகா இல்லம்''
24/3. 2ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (7735)

## முதலாம ஆணடு நினைவஞ்சலி



### செல்வி மாதர் பொன்னம்மா


தோற்றம்: 19—11—1923 மறைவு: 21—10—1987

திதி: 08—11—1988

ஆண்டொன்று கழிந்தாலும்— அக்கா
உங்கள் முகம் அழியாத ஓவியம்
மாண்டுபோனாலும் உங்களை எம்மால்
மறக்க முடியாத
இந்நாளில் உங்கள் ஆத்மாவிற்கு— நாம்
சாந்திரப் பிரார்த்திக்கின்றோம்
உங்கள் பிரிவால் துயருறும்.
சகோதரிகள், பிள்ளைகள்.

சுன்னாகம் கிழக்கு.
சுன்னாகம். (7890)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நாகலிங்கம் கனகநாயகம்

( அரச திரைப்படக் கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர் )

தோற்றம்: 1938—06-14 மறைவு: 1987—11—08

மறைந்தும் மறவாத நினைவுகள்.

மனைவி, பிள்ளைகள், தாயார், சகோதரி,
சகோதரர்கள், உறவினர்கள்.

கரணவாய் தெற்கு, புலோலி தெற்கு,
கரணவாய். புலோலி.
(7898)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### நாகலிங்கம் சிவலிங்கம்

(STUD Keeper, A. I. Centre Thirunelvely)

ஆண்டவன படைப்பு - 30. 07. 1936
அழிப்பு - 21. 10. 1987
(திதி: 08. 11 1988)

எங்கள் இதயத்தில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டு பிரிந்தாலும் உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமகன்
கோணாவளை லேன் பேத்திகள், பேரன்.
கொக்குவில் கிழக்கு (7874)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தர்மலிங்கம் ஜெயதாஸ்

(ஜெகன்)

விண்ணுக்கு விரைவு: 11.08.88

காணிக்கை! காணிக்கை!!
கண்ணீரால் காணிக்கை
உற்றவரும், பெற்றவரும்
செலுத்துகின்றோம் உனக்கு
செந்நீரால் காணிக்கை
ஊரவரின் நன்மைக்காய்
என்று பல நாள் எங்கோ சென்ற நீ ...
ஓய்வெடுத்துச் சில நாள்
எம் குடும்பம் வாழ
உழைக்கு முன்னர்
உலகை விட்டே நீத்து விட்டாய்
உத்தமனே உன் ஆத்மா சாந்தியை வேண்டி

பெற்றவள் தர்மலிங்கம் சின்னத்தங்கம்,
வீரபத்திர கோவிலடி, சகோதர-சகோதரிகள்
அல்வாய் வடக்கு. மைத்துன-மைத்துனிகள்,
அல்வாய். மற்றும் உற்றார்.
(7803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாண்டு நினைவஞ்சலி



டாக்டர் கே. கணேசரெட்டினம்

தாயின் மடியில்: 1959.08.08

இறைவனடியில்: 1987.10.21

திதி: 1988.11.08

எம் இனிய அன்புத் தெய்வத்தைக் கண்டீர்களா?
கணேஸ்ஐயா! நீர் எங்கே சென்றுவிட்டீர்?
எம் அணைந்த அன்புத் தெய்வமே! எம்
இதயத்தில் நீர் என்றும் அணையாத் தீபமே!
இருபத்தி எட்டும் நிறையாத உம் காளைப்பருவம்
யமனைக் கவர்ந்து விட்டதோ
எங்கே ஐயா எமைத் தவிக்க விட்டுச் சென்றாய்?
தீராத துன்பம் எம்மனதில் அலைமோதுதையா!

வெள்ளைச் சீருடையுடன் பொதுநலக் கடமைக்கெனப் போனீரே அன்று
கள்ளங்கபடமின்றி அன்பாகப் பழகுவீரே
ஆனால் இன்று எல்லோரையும் தவிக்கவிட்டு எங்கே சென்றுவிட்டீர்?
தடிக்குதையா எம் இதயம் இன்றும் அந்தோ!
கலங்குதையா எம் கண்கள் கண்ணீரால்!

எம்முடன் மிகவும் அன்பாகப் பழகிவிட்டு பாதியில்
எமைப் பரிதவிக்கவிட்டு விட்டுச் சென்று விட்டீரே
உம் இறுதிப் பயணத்தைக் கூட எம்மால் காண முடியவில்லையே?
உம் பொன்னான திருமேனி இப்போ எங்கே ஐயா?
நீர் மறைந்து முடிந்த இந்த ஓராண்டை நினைக்கும்போது
எம் உள்ளம் எல்லாம் குமுறுதையா
உம் ஆத்ம சாந்திக்காக நம் அனைவரும்
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

தாய்: திருமதி த. கேநுசிகாமணி,
சகோதரி, சகோதரன,
மைத்துனர், மருமகன்.

54, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(7742)

இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகளில்

# காணி இல்லாதோருக்கு கிளிநொச்சியில் காணி

யாழ்ப்பாணம், நவ 8

இந்தியாவிலிருந்து அகதிகளாகத் திரும்புவோரில் காணிகள் இலலாதவர்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகள் வழங்குவது குறித்து ஆராயப்பட்டது.

அண்மையில் யாழ் நகரில் அகதிகள் புனர் வாழ்வு சம்பந்தமாக நடைபெற்ற ஓர் உயர்மட்ட மாநாட்டில் இந்த விடயம் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தியாவிலிருந்து அகதிகளாகத் இங்கு திருபுவோரின் புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ் சேதமடைந்த அகதிகளின் வீடுகளைப் புனர் நிர்மாணம் செய்யும்பணிகள் தற்போது ஆரம்பமாகியிருக்கின்றன.

ஆனால் காணிகள் இல்லாதவர்களுக்கு இந்த நிவாரண உதவி கிடைப்பதற்கான வசதிகள் எதுவும் இல்லை.

எனவே அவர்களுக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் கீழ் எவ்வாறு உதவலாம் என்று சம்பந்தப்பட்ட மாநாட்டில் ஆராயப்பட்டிருக்கிறது.

இவர்களுக்கு காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அந்த மாநாட்டில சிபார்சு செய்யப்பட்டது.

இதனை அடுத்தே சம்பந்தப்பட்டவர்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகளை வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது நல்லதென்று மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்குடா நாட்டில் சனநெருக்கம் அதிகமாக இருப்பதால், இங்கே காணிகளைப் பெறுவது சாத்தியப்படாது என்றும் இதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் தேவையான காணிகளை வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராயலாம் என்றும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

(இ ஐ)

வருடாந்த சாரணர் பாசறை விழாவில்:

## மகாஜனக் கல்லூரிக்கு முதன்மைக் கேடயம்

யாழ்ப்பாணம், நவ 8

காங்கேசன்துறை சாரணர் கிளைச் சங்கத்தினால் நடத்தப்பட்ட வருடாந்த சாரணர் பாசறை விழா மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

காங்கேசன்துறை, மானிப்பாய், வட்டுக்கோட்டை, காரைநகர் கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த 21 சாரணர் குழுக்கள் இப் பாசறை விழாவில் பங்குபற்றின.

மாவட்ட ஆணையாளர் திரு. நாகேந்திரன் போஜன் இப் பாசறை விழாவை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தினர்.

விசேட விருந்தினராக உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். மகாலிங்கம் கலந்து கொண்டார்.

ஆங்கிலக் கல்வி அதிகாரி திரு. ஆர். கே. குலசேகரம் பிரதம விருந்தினராக கலந்து வெற்றியீட்டிய குழுக்களுக்கு சான்றிதழ்களையும், கேடயங்களையும் வழங்கினார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சாரணர் குழு அணி நடை, பாசறை அமைத்தல் மைதானக் காட்சி, தீப் பாசறை ஆகிய நிகழ்ச்சிகளில் முதலாம் இடத்தையும், நிலைக்காட்சி சாரணர் வேலை வாரம் ஆகிய நிகழ்ச்சிகளில் இரண்டாம் இடத்தையும் பெற்று முழு மாவட்டத்திலும் முதன்மைக் கேடயம் பெற்றது.

(ச)

### உண்ணாவிரதம்

மாங்குளம், நவ 8

ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலய மண்டபத்தில் தடுப்புக் காவலில் உள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்கு ஆதரவாக ஒட்டுசுட்டான் மக்கள் குழுக்களால் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

உண்ணாவிரதத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட 500 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

(ச 94)

## பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி ஆரணி

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த Dr. பரிமேலழகர் கனகபூசனி தம்பதிகளின் அருந்தவப் புதல்வி ஆரணி தனது இரண்டாவது பிறந்த தினத்தை (7-11-88) இன்று மிகவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பாலப்பா: பாலம்மா, அக்காமார், அண்ணமார், சத்தியாச் சித்தி (நர்ஸ் சித்தி), பாமாசித்தி, சித்தப்பா, தம்பி, சண்டிப் பெரியப்பா, பெரியம்மா, விஜி அத்தான், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள் [7805]

முருகன் மினி சினிமா
கொக்குவில்
தீபாவளி வெளியீடு
8-9 இருநாட்கள் மட்டும்
தினசரி 10 45, 2 45 காட்சிகள்
எம். ஜி. ஆர், ஜெயலலிதா
குடியிருந்த கோயில்
எங்குமே வெளியிடப்படாத V.G.P. பிரதி
(7953)

# ஓராண்டு நினைவஞ்சலி



### செல்வி செல்வநாயகம் மதிமலர்

(ஜோதி)

உதயம்: 18 09-1968

அஸ்தமனம்: 21 10-1987

திதி: 08 11-1988

அன்பு மகளாய் பாசமுள்ள சகோதரியாய்
எம் இல்லத்தில் உறவாடி மகிழ்ந்த - எம்
ஜோதியே எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
உன் பிரிவின் நினைவலைகள் பேறாறாய்
பெருக்கெடுத்து வற்றாத நீராக அலைமோதி
நிறை நெஞ்சம் குளிர்விக்கும் நின்னுருவின்
நிழல் நெஞ்சம் என்றும் நீங்காதே
உன் ஆதமாவின் சாந்திக்காக தினமும்
இறைவனை வணங்குகின்றோம்.

தகவல்:
திரு. மு. செல்வநாயகம்,
111/13, இராஜசிங்கம் வீதி.
யாழ்ப்பாணம்.

சோகச்சுமைகளோடு
அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
சித்தப்பாமார்,
உறவினர்கள்.
அன்பானவர்கள்.

(7133)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நா. கனகநாயகம்
(State Film Co-operation Colombo)

தோற்றம்: 14 - 06 - 1938


அழிப்பு: 08 - 11 - 1987

திடீர் மறைவால் "உங்கள் ஆத்மா சாந்திஅடையவேண்டுகின்றோம்"

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி,
மகன்மார்கள்,
உறவினர்,

"மணி வாசா"
கரணவாய் தெற்கு,
சரவெட்டி. (7853)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### வைத்திலிங்கம் லகுபரன்

பிறப்பு:- 1- 1- 1958

அழிப்பு:- 21- 10- 1987

திதி:- 8- 11- 88

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதே நட்பு எனப் பகர்ந்த
வள்ளுவர் வழியில் வாழ்ந்த நண்பனே
உள்ளத்தில் உண்மை ஒளிர்ந்திடத் திகழ்ந்தாய்
உன்றன் உருவம் அழிந்தொழிந் தாலும்நின்
அன்பராம் எம்நெஞ்சில் என்றுமே ஒளிர்கிறாய்.

உமது பிரிவால் ஏங்கும்
நண்பர்கள்

(7719)

BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
A/L 90
கலை, வர்த்தகர்
பிரிவு 3
பொருளியல் :- வரதராஜன்
அளவையியல் :- S. S. மனோகரன்
வர்த்தகம் :- ரட்ணம்
கணக்கியல் :- மரியதாஸ்
இந்துநாகரிகம் :- ஜோதீஸ்வரன்
தமிழ் :- செல்வி மீரா
புவியியல் :- இக்னேசியஸ்
அரசியல் :- சுந்தரமூர்த்தி
ஆரம்பம்:
12-11-1988
சனி- 9. 00 a.m
(C 741)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பிதழ் உதயன் தீபாவளிச் சிறப்பிதழ்


எமது ஸ்தாபனத்தின் மூலம் வெளிநாடு சென்றவர்களுக்கும்,
வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும்

**தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்!**

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம்**

GOLDEN TRAVELS & TOURS

✶ மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு ✶ துரிதகதிப் பிரயாணம்
✶ நம்பிக்கை, நாணயம், நேர்மை, கண்ணியம்
இவற்றுக்கு ஒரு முகவர் நிலையம்:


**★ கோல்டன் ரவல்ஸ் ★**

கிளை: [1] குப்பிளான், [2] வல்வெட்டி. புகையிரத வீதி, சுன்னுகம். (C/746)



அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும்
எமது உளம் நிறைந்த

**தீபாவளி வாழ்த்துக்கள்**
உரித்தாகுக.



"உழைத்து
உண்பவனே
மனிதன்"

—மகாத்மா காந்தி.

20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி மகாத்மா காந்தியின் படிப்பினை' என்ற நூலையும் அழகிய காந்தி ஸ்ரிக்கரையும் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

— மில்க்வைற் — யாழ்ப்பாணம்.

(C/725)



சீமாட்டி
Seemati

எமது
வாடிக்கையாளர்
களுக்கும்.
ஆதரவாளர்களுக்கும்
நண்பர்களுக்கும் எமது

தீபாவளி
வாழ்த்துக்களை
தெரிவித்துக்
கொள்கிறோம்.

நாளுக்கோர் புதுமை
நாடுவது உண்மை
இவற்றை அளிப்பது தான்

**★ சீமாட்டி ★**

யாழ்ப்பாணம்.
கிளை — சுன்னுகம்.

(C/ 745)



தீபாவளித் திருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள்,
ஆதரவாளர்களுக்கு

**நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!**

மின்சார, உபகரணங்களுக்கும், உங்கள் சகல மின் இணைப்பு வேலைகளுக்கும் எம்மை நாடுங்கள்!

✶

**"யூனி ரோன்"**

270, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C/753)


## துன்பம் விலகி . . . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீகிருஷ்ணபிரானின் திருவுருவத்தை நினைவுறுத்திக் கொண்டு 'கங்கா ஸ்நானம் ஆயிற்று' என்று கேட்பது நம் தென்னிந்திய நாட்டுமரபு அன்று எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போது எண்ணெயில் லக்ஷ்மிதேவியும் நீரில் கங்கையும் இருப்பதாகப் புராணம் கூறுகிறது. அதில நம்பிக்கை இருப்பவர்களுக்கு ஆத்ம சாந்தி உறுதி.

கங்கை நீரானது இமயத்தின் உச்சியில்இருந்து ஸ்படிகம் போன்ற தூய்மையான பனிமெத்தையில் இருந்து ஓடிவருகிறது. மனித சஞ்சாரம் கிட்டினமாத்திரத்தில் அழுக்கும் துர்க்கந்தமும் பாவமும் கிடைக்கின்றன.

ஆயினும் இத்தனையையும் வாங்கிக் கொண்டு தன் இனம் மாறாமல் தன்னைத் தொட்டவர்களின் பாவத்தைத் துடைத்து உடலைக் கழுவி உள்ளத்தைப் புனிதமாக்குகிறது தாயுள்ளத்தின் தன்னலமற்ற தன்மைக்கோ, தூய்மைக்கோ, சந்தேகமற விளக்கம் கூறி சங்கா நதி நிமிர்ந்து நிற்கிறுள். அவளைத் தேடிச் செல்ல முடியாத மக்களிடம் தானுக ஓடி வருகிறுள உண்மை அன்னையாகிய அவள் தீபாவளி அன்று

இத் தீபாவளித் திருநாளை வெறும் திருமகளின் தினமாக மட்டு கொண்டாடாமல் கலைமகள் திருவிழாவாகவும் கொண்டாடப்படுகிறது. கருமை இரவு மலைமகளின் திருமேனியைக் கொண்டு நிறுத்த அதை ஒளியாக்கும் சுடர் திருமகளின் காட்சியாகப் பிரகாசிக்க கலைமகளும்வர வேண்டியது நியாயமே. அறியாமையைப் போக்கி ஞானத்தைப் பெருக்கிய நாளாக கொண்டாட உயர்ந்த இலக்கிய மலர்களைக் கொண்டு வந்து கொண்டாடுவது பேண்மைக்குரியது.

தீபாவளித் திருநாள் ஒன்றே நம் வாழ்க்கைக்கும் வரலாற்றுக்கும பொருள் கூறும் சித்திரமாக அமைகிறது. இப்புனிதமான தினத்தில் நாமும் எல்லோருடைய துக்கமும் விலகி இன்பமுடன் வாழஅருள் புரியுமாறு பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டு நல் வாழ்வு வாழ்வோமாக


**யாழ். றிக்கோ சுவீற் அன கிறீம் ஹவுஸ்**
ஸ்தாபனத்தார் தங்கள்
வாடிக்கையாளருக்கு உள்ளம் கனிந்த

**தீபாவளி நல்வாழ்த்துக்களை**
**தெரிவித்துக் கொள்கின்றார்கள்.**

காலை உணவாக:
✶ இடியப்பம் ✶ இறைச்சிக்கறி
★ பாண் ✶ பருப்புக்கறி
✶ சினிச்சம்பல் ✶ கிழங்குக்கறி
இவற்றுடன்
★ சுடச்சுட மட்டன் ரோல்ஸ்
✶ சுடச்சுட பற்றிஸ் ✶ சுடச்சுட வடை
★ கேக் ★ பொம்பே சுவீற்ஸ்
வகைகளையும்
தரமான ஐஸ்கிறீம் வகைகளையும்
சர்பத் குளிர்பானங்களையும் வழங்குகின்றார்கள்
பண் வீடுகளுக்கு எடுத்துச் செல்லக் கூடிய
முறையில் விற்பனைக்கு உண்டு

**யாழ். றிக்கோ**
**சுவீற் அன் கிறீம் ஹவுஸ்**

இல. 352 மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
(C 748)



**யாழ் குடாநாட்டு**
**வீடியோ ரசிகர்களின்**

ஆதரவால் வளர்ந்த எமது ஸ்தாபனம்
வாடிக்கையாளர்கள் அன்பர்கள்
ஆதரவாளர்கள் அனைவருக்கும் மங்களகரமான

**தீபாவளி வாழ்த்துக்களைத்**
தெரிவித்துக் கொள்வதில்
பெரு மகிழ்ச்சியடைகின்றது.

அன்றும் இன்றும் என்றும்
உங்கள் தேவை — எமது சேவை.

**"குணம்** அதுஓர்வீடியோ சமுத்திரம்"

உங்கள் றெக்கோடிங் ஓடர்கள்
எதுவானலும் உடன் தொடர்பு
கொள்ளுங்கள்.


**குணம்** வீடியோ சென்ரர்


42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



நீர்விநியோகம்
உங்களுக்கு ஒரு
பிரச்சினையா?
இன்றே தீர்வு காண

**சிங்கர்**
பிறஷ் இல்லாத மின்சார
நீரிறைக்கும் இயந்திரம்






கிணற்றில் அல்லது உயர நீர்த்தாங்கியில் இருந்து நீரைப் பெறும் நீங்கள் அமுக்கப் பிரச்சினைகளை எதிர்நோக்கினுல் சிங்கரின் பிறஷ் இல்லாத மின்சார நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை நாடித் தீர்வு காணுங்கள்.

சிங்கரிடம் பலவகையான பிறஷ் இல்லா மின்சார நீரிறைக்கும் இயந்திரங்கள் உள்ளன. விரும்பியதைத் தேர்ந்தெடுத்துப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.

● அதிகபட்ச உறிஞ்சு திறன் 1400 கலன்/மணி முதல் 4500கலன்/மணி
● அதிகபட்ச உறிஞ்சு ஆழம் 25 அடி. (கிணறு மேலும் ஆழமெனின் ஆழ் கிணறு உபகரணங்கள் ரூ. 900/-க்கு உண்டு.)
● மொத்த வீச்சு அளவு 65 அடி.

மொடல் ஈ.பி.எம். 10 1''×1'' ரூ. 4,090/-
ஈ.பி. 15 1½''×1½'' ரூ. 4,290/-
ஈ.பி. 20 2''×2'' ரூ. 5,930/-



Minds/SA/7

விவசாயப் பிரிவு
**சிங்கர்**
மாசற்ற மேன்மை

சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது. தீவடாங்கலானது.



**A/L** விஞ்ஞான மாணவர்கட்கு
**எமது தீபாவளி நல்வாழத்துகள்**

89 Batch பரவளைவு
ஆரம்பம்: 8. 11. 88
Tue, Thu. Fri, 6. 15 a. m.
தடுக்கும் ஊடகங்களில் இயக்கம்
ஆரம்பம்: 10-11 88
Thu — 4. 30 Sat & Sun 6. 15 a. m.
90 Batch மீதி தேற்றம்
ஆரம்பம்: 12 11 88
Sat & Sun — 7 30 a. m.
வேக நேர வளையி
Sat & Sun — 8. 30 a. m.
ஆசிரியர்:
**Mr. கணேசன்** B. Sc (Hons)
ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.



பசியும் பிணியும் நீங்கி, வளமும்
வாழ்வும்பெற்று அன்பால் பண்பால்
அறிவால் இணைந்து வாழ
இத்தீபத் திருநாளில் வாழ்த்துகிறோம்.

Computer Programming in

● **Basic**
● **dBase III +**
● **Cobol**

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிர் ஊட்டப்பட்ட அறையில் கூடியநேர செய்முறைப்பயிற்சி I B M (Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும்.

**Unikco Computer Centre**
**No. 5, Power House Road,**
**2nd Lane, JAFFNA.**
[C-766]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:
நடபிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்.

பொருள்:
நட பிர்கு உறுப்பாவது நண்பருடைய உரிமைச் செயலாகும்; அந்த உரிமைச் செயலுக்கு உடன்பட்டவராதல் சான்றோர்ன் கடமையாகும்.


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல: 292/2 நாவலர் வீதி. தொலைபேசி: 24805, 22073
யாழ்ப்பாணம்.
08- 1 1988 த. பெ இல 23


## தீபாவளிப் பிரார்த்தனை

தர்மமும், நீதியும் நிலை நிறுத்தப்பட்டால் தான், நீண்டு நிலைத்தால்தான் நாடு வாழும், உலகம் வாழும்

தர்மமும், நீதியும் அருகிப் போனால் அழிந்து போனால் அதர்மமும், கொடுங்கோன்மையும் தலைதூக்கும்

ஆனால் அதர்மமும், அராஜகமும், அநீதியும் கொடுங்கோன்மையும் நீண்ட காலத்துக்கு நிலைப்பதில்லை, அவை நிரந்தரமானவை அல்ல.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட அவதார புருஷர்கள் தோன்றுகிறார்கள்.

அதர்மம் நீங்கித் தர்மம் தழைத்தோங்கும் போது மட்டுமே மக்கள் வாழ்வு ஒளியமயமாகிறது

இன்று கொண்டாடப்படும் தீபாவளித் திருநாளும் அதர்மம் நீங்கித் தர்மம் தலையோங்குவதை நினைவு கூருவதே ஆகும்.

கொடுமை இருளில் கிடந்த மக்கள், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் ஒளி பெற்ற நாளை விடுதலை பெற்ற நாளை, சமயப் பின்னணியில் எடுத்துக் கூறுவதே தீபாவளியின் தத்துவம் ஆகும்.

அநியாயமும், அசுரத்தனமும் ஒளிக்கப்பட்ட நாளை நினைவு படுத்துவதும் ஆகும் அது.

இருள் சூழ்ந்த உலகில் ஒளி பிறக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதவர்கள் யார்? தீபங்களை வரிசையாக அடுக்கி, இருளைப் போக்கி நல்ல எதிர்காலத்தை இறைஞ்சும் தீபாவளித் திருநாள் இன்று.

கடந்த பல வருடங்களாக ஈழத்தமிழர்களை, போக்கவொண்ணா இருள் சூழ்ந்திருக்கிறது. அந்த இருள் அகன்று ஒளி பிறக்காதா என்ற ஏக்கத்துடன் பல தீபாவளித் திருநாள்கள் கடந்து போயின!

இம்முறையும் தீபாவளி வந்துவிட்டது. இருண்ட வாழ்க்கை அகன்று ஒளிமயமான வாழ்க்கை மலர வேண்டும் என்று எல்லோரது மனங்களும் எண்ணும் என்பதில் ஐயமில்லை.

அந்த எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் நிறைவேற வேண்டும் என்பதே எமது விருப்பமும், இறைஞ்சுதலும் ஆகும்.

நாடு, அரசு, பத்திரிகைகள் என்று எல்லாமே மக்களுக்காகவே ஆகையால் மக்கள் விரும்பும் ஒளிமயமான காலம் பிறக்கப் பிரார்த்திப்பபோமாக.

## அஷ்டலக்ஷ்மி கலண்டர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ 8

1989 ஆம் ஆண்டுக்கான அஷ்டலக்ஷ்மி பஞ்சாங்கக் கலண்டர் வெளியீட்டு விழா ஞாயிறன்று இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக உதயன்- சஞ்சீவி நிர்வாக இயக்குநர் திரு ஈ சரவணபவன் கலந்து கொண்டார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் திரு கே. பாலச்சந்திரன் குத்து விளக்கேற்றினார்.

ஆர். எஸ்' பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. செல்வானந்தன் முதலாவது கலண்டரை வெளியிட்டு வைத்தார்

ஷ்ரூ நிறுவனத்தின் யாழ் பொது முகாமையாளர் திரு செ. ஸ்ரீரங்கநாதன் அங்கு பேசுகையில் சொன்னதாவது:-

வீட்டுக்கு ஒரு பசு, மரம் இருக்க வேண்டும் என்பது போல, ஓர் அஷ்டலக்ஷ்மி கலண்டரும் இருக்க வேண்டும்.

அந்தளவுக்கு வழ்க்கைக்குத் தேவையான பல அம்சங்களும் பொன்மொழிகளும் அஷ்டலக்ஷ்மி பஞ்சாங்கக் கலண்டரில் சேர்க்கப்பட்டுள்ளன.

இக் கலண்டரை அச்சிட்டு வெளியிடும் நடவடிக்கை ஒரு சிறந்த கைத்தொழில் முயற்சியாகும்.

எமது பிராந்தியத்தின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருப்பது கைத்தொழில் துறையே, ஆகவே அத்துறையில் நாங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலமே எமது பொருளாதார வளர்ச்சியையும் வேகமடையச் செய்ய முடியும்.

1989 ஆம் ஆண்டு கலண்டர் விற்பனையால் வரும் லாபத்தையும் இந்த அச்சகத்தால் வரும் லாபத்தையும் சிறுவர் இல்ல வளர்ச்சிக்கு அதன் உரிமையாளர் அர்ப்பணிக்க இருப்பது பாராட்டுக்குரியது

—இப்படி திரு. ஸ்ரீரங்கநாதன் தெரிவித்தார். (உ-எ)

## கௌரவம்

மட்டக்களப்பு, நவ 8

மட்டக்களப்பு மாவட்டத்தில் 25 வருடங்கள் கிராமசேவை அலுவலர்களாக பணியாற்றிய 34 பேர் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (இ-1)

## கரையோரம் பாதிப்பு

அராலி, நவ. 8

யாழ் குடாநாட்டின் கரையோரப் பகுதியில் மண் எடுப்பதினால் கடல் நாட்டுக்குள் புகுந்து கரையோரங்களைப் பாதித்து வருகிறது.

# ஆப்கன் உடன்பாட்டை மதித்து நடவுங்கள்; சகலதரப்புக்கும் ஐ.நா. அவசர வேண்டுகோள்

ஐ நா, நவ 7

ஆப்கன் தீர்வு சம்பந்தமான ஜெனிவா உடன்பாட்டை சகல தரப்பினரும் உறுதியாகக் கடைப்பிடிக்கும்படி ஐ நா. பொதுச் சபை வேண்டுகோள்விடுத்துள்ளது. ஆப்கனில் அரசுப் படைகள் - கிளர்ச்சிப் படைகளின் மோதல் தீவிரமாகி வருவதைத் தொடர்ந்து இந்த அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஜெனிவா உடன்பாட்டை ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகியன மதித்து நடக்க வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இத் தீர்மானத்தை ஐ நா பொதுச்சபைத் தலைவரான தாந்தே கபுட்டோ கொண்டு வந்தார் (எ)

## கெரில்லாக்களுக்கு உதவுவதை நிறுத்தினால் சோவியத் துருப்புகள் வாபஸாகும்!

### பாகிஸ்தானுக்கு ஆப்கன் தலைவர் பதில்

காபூல், நவ.7

கெரில்லாக்களுக்கு ஆயுதம் வழங்குவதை பாகிஸ்தான் நிறுத்தினால் துருப்புக்கள் வாபஸ் வாங்குவதை மீண்டும் ஆரம்பிக்கும்படி சோவியத் யூனியனை கேட்டுக் கொள்வோம்.

ஆப்கன் அதிபர் டாக்டர் நஜிபுல்லா நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

ஆப்கன் அரசுக்கு நீண்டதூர ஏவுகணைகளை வழங்கியது, துருப்புக்கள் வாபஸ் வாங்குவதை இடைநிறுத்தியது ஆகியன குறித்து பாகிஸ்தான் சோவியத் யூனியனுக்கு கடும் வார்த்தைகள் கொண்ட ஆட்சேபனைக் கடிதத்தை அனுப்பிவைத்து இருக்கிறது

நீண்டதூர ஏவுகணைகள், பாகிஸ்தானைத் தாக்கக்கூடியசக்திவாய்ந்தவை என்று இஸ்லாமபாத் அரசு குற்றஞ்சாட்டியிருக்கிறது.

பாகிஸ்தானின் கண்டனத்துக்குப் பதிலளிக்கு முகமாகவே ஆப்கன் அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ)

## அமெரிக்க ஜனதிபதி தேர்தல் இன்று

வாஷிங்டன், நவ 8

அமெரிக்க ஜனதிபதித் தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது

இறுதிநேரக் கருத்துக் கணிப்பிற் குடியரசு வேட்பாளர் ஜோர்ஜ்புஷ் ஜனநாயக வேட்பாளர் மைக்கல்டுகாகிஸ் 5 சதவீதத்தினால் முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது (எ)

வெளி உலகில்

## கொடியேற்றுவதில் ஜா - ஜெ அணிகள் போட்டி

ஈரோடு, நவ 7

ஜெயலலிதா கொடி ஏற்றிய கொடிக்கம்பத்தில் ஜானகி அம்மாளும் கொடியேற்ற விரும்பினார்.

இது ஈரோடில் பெரும் குழப்பத்தையே கொண்டு வந்தது.

கோலப்பூர் கிராமத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

சில தினங்களுக்கு முன்னர் அந்தக் கொடிக்கம்பத்கில் செல்வி ஜெயலலிதா அ. தி. மு. க 'ஜெ' அணி கொடியை ஏற்றிவைத்து பொதுக் கூட்டம் நடத்தினார்.

சில தினங்கள் கழித்து ஜானகி அம்மாள் அக் கிராமத்துக்குச் சென்றார். அதே கொடிக்கம்பத்தில் 'ஜா' அணிக் கொடியை ஏற்றி கூட்டத்தில் பேச ஜானகி அம்மாள் விரும்பினார்.

அந்த ஊரில் இருந்த ஜெயலலிதா அணியினர் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். அதனால் பெரும் குழப்பத்தையே ஏற்படுத்தியது.

இறுதியில் அக்கொடிக்கம்பத்தில் கொடி ஏற்றாமலே ஜானகி அம்மாள் கூட்டம் ஒன்றில் பேசிவிட்டு சென்னை திரும்பினார். (எ)

## கம்பூச்சியா பற்றி ஐ. நா தீர்மானம்

ஐ நா, நவ. 7

கம்பூச்சியாவிலிருந்து வியட்னாம் துருப்புக்கள் வெளியேற வேண்டும் என்று ஐ நா பொதுச்சபையில மிகப் பெரும்பான்மையான வாக்குகளினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்துக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 19 வாக்குகளும் கிடைத்தன. (எ

## வெள்ளம்

ஜகார்த்தா. நவ. 7

இந்தோனேஷியாவில் பெரு வெள்ளம் ஏற்பட்டது. ஏழு பேர் உயிரிழந்தனர், 30 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது (எ)

## 'முதல்வர் பதவிக்கு ஆசைப்படக்கூடாது' ஜெயலலிதாவுக்கு நிபந்தனை

மதுரை, நவ. 8

தி. மு. க.வை எதிர்க்கும் எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைக்க வேண்டும். இதன் மூலம் தி. மு. க. மீண்டும் ஆட்சிக்கு வருவதைத் தடுக்க முடியும்' என்று தமிழக முன்னாள் அமைச்சர் எஸ். திருநாவுக்கரசு கூறினார்.

''இந்தக் கூட்டணியில் ஜெயலலிதா தலைமையிலான அணியும் சேரலாம். ஏனெனில் 'எம். ஜி ஆர். அரசை' அமைக்கவே நாங்கள் விரும்புகிறோம்'' என்று செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

ஆனால் முதலமைச்சர் பதவிக்கு ஜெயலலிதா ஆசைப்படக்கூடாது இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டால் தி மு க. வுக்கு எதிரான கூட்டணியில் அந்த அணியைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றார் அவர்.

கம்யூனிஸ்ட் கட்சிகள் தேசிய முன்னணிக்கு ஆதரவாக இல்லை. எனவே தி. மு. க கூட்டணியிலிருந்து இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் விரைவில் வெளியேறக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்

இ காங்கிரஸ், அ இ. தி மு க கூட்டணி நீடிக்க வேண்டும் என்று கூறிய அவர் ஜெயலலிதா அணியுடன் இ. காங்கிரஸ் கூட்டுச் சேராது என்று நினைப்பதாகச் சொன்னார். (எ-4)

## இந்தியாவில் வாக்களிக்கும் வயது 18 புதிதாக 5கோடி பேருக்கு வாக்குரிமை

இந்தியாவில் வாக்களிக்கும் வயது 21 இல் இருந்து 18 ஆகக் குறைக்கப்படஇருக்கிறது.

அனும் இந்திரா காங்கிரஸ் காரியக்கமிட்டியும் இதற்குச் சாதகமாகத் [illegible]

புதுடில்லியில் நடந்த இக்கூட்டத்திற்கு கட்சித் தலைவரும் பிரதமருமான திரு. ராஜீவ் காந்தி தலைமை வகித்தார். எதிர்க்கட்சிகளும் வயதுக்குறைப்புக்கு ஆதரவாகத் தீர்மானித்துள்ளன.

விரைவில் கொண்டு வரப்படவுள்ள தேர்தல் சீர்திருத்தச் சட்டத்தில் இதனையும் சேர்த்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் எதிர்வரும் பொதுத் தேர்தலில் புதிதாக 5 கோடி பேர் வாக்களிக்கும் உரிமையைப்பெறுவர் என்று தேர்தல் கமிஷன் கணித்திருக்கிறது.

# சைவ சமயஅனுஷ்டானங்கள்இப்போது அருகி வருகின்றன நல்லை முதல்வர் கவலை

### பிறந்த நாள் விழாவில் தீபங்களை ஏற்றிப் பின்னர் அணைக்கலாமா?

யாழ்ப்பாணம் நவ 8

சிறுவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுவது இப்போது இந்தப் பகுதியிலும் சர்வசாதாரணமாகி விட்டது. ஆனால் சைவசமய வாழ்க்கைக்கு அவசியமான சிவதீட்சை போன்ற எமது முக்கிய சடங்குகள், அனுஷ்டானங்கள் அருகி வருகின்றன.

இந்த நிலையை மாற்றி அமைக்க, சைவ சமய ஸ்தாபனங்களும், இயக்கங்களும் முன்வரவேண்டும் வெறும் பேச்சோடு நில்லாமல் செயலில் எமது சமயத்தை வளர்க்கப் பாடுபட வேண்டும்.

இவ்வாறு நல்லை ஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் வேண்டுகோள் விடுத்தார்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த சிவதீட்சை வைபவம், திருநெல்வேலியில் உள்ள சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுகிழமை நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கும், பெரியவர்களுக்கும் சிவதீட்சை வழங்கப்பட்ட அந்த வைபவத்தில் ஆசியுரை வழங்கிய போதே நல்லை ஆதீன முதல்வர் முன் கண்டவாறு தெரிவித்தார்

யாழ்ப்பாணம் சிவானந்த குருகுலத்தைச் சேர்ந்த சிவாச்சாரியர்கள், பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் காலை 7 30மணி தொடக்கம் நண்பகல் 11 மணிவரை ஆகம அனுஷ்டான முறைப்படி, விரிவான முறையில் சிவதீட்சை வைபவத்தை நடத்தி வைத்தார்கள்.

சிவதீட்சை வழங்கும் வைபவம் முடிந்த பின்னர், சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் பேராசிரியர் எஸ் வி. பரமேஸ்வரன் தலைமையில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நல்லை ஆதீன முதல்வர் தமது ஆசியுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

மேல்நாட்டு நாகரிக மோகத்தால் எமது மக்கள் சைவ சமய அனுஷ்டானங்களையும், கோட்பாடுகளையும், அவற்றின் தத்துவங்களையும் மறந்தவர்கள் ஆகிவிட்டார்கள்.

சிவதீட்சை சைவ சமயத்தவர் ஒவ்வொருவருக்கும் அவசியமானது. அதனைச் சிறு வயதினிலேயே பெற்று உடலிலும், உள்ளத்திலும் உள்ள அழுக்கைப் போக்கி எமது இதயத்தில் இறைவனை இருத்திக் கொள்ள வேண்டும். சிவதீட்சை பெறுவதைக் கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும்.— என்றார்.

பிறந்த நாள் கொண்டாடுபவர்கள், தமது பிள்ளைகளைக் கொண்டு தீபங்களை ஏற்றி அவர்களைக் கொண்டே அணைக்கவும் செய்கிறார்கள். அப்படி அணைப்பது பிள்ளையின் வாழ்க்கையை அணைப்பதாக அர்த்தப்படும் [illegible] முதல்வர் கேள்வி எழுப்பினார்.

பிரம்ம ஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:-

சைவசமய வாழ்க்கையின் ஆரம்பம் சிவதீட்சைதான் குருவின் மூலம் ஆண்டவனைக் காண்பதற்கு சிவதீட்சை வழி அமைக்கிறது. ஒவ்வொரு நாள் காலையிலும் சிவதீட்சை செய்வதற்காக நீறுபூசிய கைகளால செய்யப்படும் காரியங்கள் சித்தியாகவே முடியும்.

சிவதீட்சை உடம்பையும், ஆன்மாவையும் பரிசுத்தமாக்கி ஆன்ம ஈடேற்றத்துக்கு உதவுகிறது—என்றார்

மிலக்வைற அதிபர் சிவதர்ம வள்ளல் திரு க. கனகராசா பேசுகையில்—

சிவதீட்சை பெற்றவர்களே சிவனடியார்கள். அவர்கள் சிவசின்னங்களைத் தரிசித்து மற்றவர்களையும் அவ்வாறு செய்யத் தூண்டவும், துணையாகவும் இருக்க வேண்டும்'' என்றார்

பேராசிரியர் பரமேஸ்வரன் தமது உரையில்—

''சிவாச்சாரியார்களை ஆதரிக்கவும், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், மற்றும் வேண்டிய வசதிகளைச் செய்வதற்கும்மக்கள் முன்வரவேண்டும் அது அவர்களது கடமை'' என்றார்

உதயன்—சஞ்சீவி நிறுவனத்தின் ஆதரவில் நடைபெற்ற சிவதீட்சை வழங்கும் வைபவத்தின் பின்னர், மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்ச்சியும், மகேஸ்வர பூசையும் இடம்பெற்றன.

## ஜே.வி.பி. ஜனநாயக வழிக்குத்திரும்பினால்மட்டுமே கோரிக்கைகள் பரிசீலனை

கொழும்பு, நவ 8

மக்கள் விடுதலை முன்னணியினரும் ஜனநாயக வழிக்குத் திரும்பினால் மட்டுமே முன் நிபந்தனை இன்றி ஏழு கட்சிகள் அணியின் யோசனைகளை அமுல் நடத்துவதுபற்றி பரிசீலனை செய்வதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன ஏழு கட்சித்தூதுக் குழுவிடம் தெரிவித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஏழு கட்சித் தூதுக் குழு [illegible] ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியது அல்லவா!

அப்போதுதான் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஏழு கட்சி அணி. மகாசங்கம் ஆகியவற்றின் யோசனைகளை அமுல் நடத்துவதானால் ஜே. வி பி ஜனநாயக வழிக்கு முதலில் திரும்ப வேண்டும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன முன்னர் முன்நிபந்தனை விதித்து இருந்தார் என்பது தெரிந்ததே. (இ-எ)

## மாணவர் எழுச்சி அவர்கள் கல்வி வளர்ச்சியில் தங்கி உள்ளது

### பாராட்டு வைபவத்தில் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், நவ 8

நாடு நாடாக மிளிர வேண்டுமானால் மாணவர் சமுதாயம் எழுச்சி பெறவேண்டும். மாணவர்களின் எழுச்சி அவர்களின் கல்வி வளர்ச்சியிலேயே தங்கியிருக்கிறது.

வவுனியா, கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்.

அண்மையில் வெளியான ஜி சி. ஈ. (சாதரண) தரப் பரீட்சையில் பளை மகாவித்தியாலயத்தில் சிறப்புச் சித்திகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டும் விதமாக சம்பந்தப்பட்ட கல்லூரியில் இடம்பெற்ற வைபவத்தில் பேசிய அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்காலச் சிற்பிகளாகிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் உறுதுணையானவர்கள்.

அவர்களின் அரவணைப்பிலும் அனுசரணையிலுந்தான் மாணவர்கள் முன்னேற முடியும்.

இந்தப் பாடசாலையில் 133 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள். அவர்களுள் 94 மாணவர்கள் ஜி.சி ஈ. உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களுள் 30 மாணவர்கள் விஞ்ஞானப் பிரிவுக்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள். முழுமையாக 71 சதவீதமானோர் உயர்தரத்துக்கு தகுதி பெற்றிருக்கின்றனர்.

அதிவிசேஷ சித்திகளை 35 மாணவர்கள் பெற்றுள்ளனர்

இந்தப் பெறுபேறுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடம் வகிக்கிறது. யாழ் குடாவின் பாடசாலைகளுக்கு ஈடுகொடுத்து பளை வித்தியாலயம் கல்வியிலும். கல்வியின் ஏனைய துறைகளிலும் முன்னணி வகிப்பது கண்டு நான் பெருமைப்படுகின்றேன்.

இவ்வாறு அவர் கூறினார்

பரீட்சையில் விசேட சித்திகளை அதிகமாகப் பெற்ற செல்வி. மயில்வாகனம் இந்துமதி என்ற மாணவிக்கு ஆயிரம் ரூபா பணப்பரிசை தமது சொந்த அன்பளிப்பாக திரு சுந்தரலிங்கம் இந்த வைபவத்தின்போது வழங்கினார்.

இந்த வைபவத்துக்கு வித்தியாலயக் கொத்தணி அதிபர் திரு அ. பொ. செல்லையா தலைமை வகித்தார். (இ-ஐ)

## சந்திரிகா நாடு திரும்புவார்

கொழும்பு நவ 8

திருமதி சந்திரிகா குமாரணதுங்க விரைவில் கொழும்பு திரும்புவார்.

இதனை மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் வை. பி. டி. சில்வா வெளியிட்டார். [உ-எ]

## கெனமன் வீட்டில் கொள்ளை முயற்சி

கொழும்பு, நவ.8

கம்யூனிஸ்ட்கட்சித்தலைவர் பீட்டர் கெனமனின் கொள்ளுப்பிட்டி வாசஸ்தலத்தில் கடந்தவெள்ளி கொள்ளையிட முயற்சித்ததாகக் கூறப்படும் மூவர் பிடிக்கப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். [உ எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✶ ஜோண்சன்
JOHNSON (10 H P.)
வெளியிணை இயந்திரங்களுக்கு
வடபகுதி விநியோகஸ்தர்கள்
மலிவு விலை. 25,500/-
உதிரிப் பாகங்களும்
எம்மிடம் பெறலாம்
சேன். அன்ரனீஸ்,
40, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.



# உதயன்

08 - 11 - 1988 செவ்வாய்க்கிழமை



ஜோண்சன் ✶ JOHNSON
(10 H P)
வெளியிணை இயந்திரங்களையும்,
உதிரிப்பாகங்களையும்
லுயாலா சைக்கிள்
வலை, நூல், போயா
போன்ற கடற்றொழில் உபகரணங்களையும்
எம்மிடம் மலிவு விலையில
பெற்றுக்கொள்ளலாம்!
வட பகுதி
விநியோகஸ்தர்கள்; சேன். அன்ரனீஸ்
63, யூதாதேயு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.


## பஜனை

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஸ்ரீ சத்திய சாயிபாபா யாழ் மத்திய சேவாசமித்தியில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு "அகண்ட நாம" பஜனை ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த பஜனை மறுநாள் மாலை 5 மணிவரை தொடர்ந்து 24 மணி நேரம் நடைபெறும். (உ-9)

# வட்டக்கச்சியில் தேடுதல், ஷெல் தாக்குதல்

வட்டக்கச்சி, நவ 8

கடந்த சனிக்கிழமை காலை முதல் வட்டக்கச்சி இராமநாதபுரம்' கல்மடுநகர் பகுதிக் காடுகளில் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதலும், ஷெல் தாக்குதலும் நடத்தி வருகின்றனர்.

விஸ்வமடுப் பகுதியில் உள்ள படைமுகாமிலிருந்தே ஷெல் தாக்குதல் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம் தேடுதலின் போது பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கைகள் காரணமாக காட்டுப்பகுதியை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் விவசாயிகள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து செல்வதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## அதிபர் பரீட்சை

அதிபர்கள் தரம் I II இற்கான போட்டிப்பரீட்சைகள் எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறும்.

பரீட்சை அனுமதி அட்டைகள் நாளை புதன்கிழமை யாழ். கல்வித் திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட உள்ளன. (உ 9)

## சொற்பொழிவு

ஸ்கந்தஷஷ்டி விரதத்தை முன்னிட்டு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் விரத நாட்களில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் 'முருகன் பெருமை' என்னும் பொருளில் உரையாற்றுவார். சொற்பொழிவுகள் ஆறு நாட்களிலும் தினமும் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும்.

ஸ்கந்தஷஷ்டி விரதம் எதிர்வரும் வியாழக்கிழமை 10-11-88 ஆரம்பமாகிறது

## அளித்த ....

ஒன்றை அமைக்கப் போவதாக திரு. ஜெயவர்த்தன வாக்குறுதி வழங்கியிருந்தார்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக நேற்று அறிவிக்கப்போவதாக திரு ஜெயவர்த்தன எனக்குக் கூறியிருந்தார்.

ஆனால் பின்னர் தொலைபேசியில் அவர் என்னுடன் தொடர்புகொண்டார்.

அமைச்சர்களுடன் கலந்தாலோசனை செய்ததாகவும் நாடாளுமன்றத்தைக் கலைக்கமுடியாத நிலையில் இருப்பதாகவும் அப்போது திரு. ஜெயவர்த்தன என்னிடம் தெரிவித்தார்.

- இப்படி திருமதி பண்டாரநாயக்கா தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். (ஒ-ஐ)

## மற்றொரு....,

டால் அதை முறியடிப்பதற்கு இந்தியா அல்லது சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளில் ஏதேனும் ஒன்று உடனே இலங்கைக்கு உதவிக்கு வரத் தயாராக இருக்கிறது— என்றார். (ஒ ஐ)

## கூலிப்படை...,

இரு கப்பல்களில் தப்பிச் சென்ற கூலிப்படையினரை இந்தியப் படையினர் கைது செய்திருப்பது தெரிந்ததே. (உ)

# வடக்கு, கிழக்கில் பிரசைகள் படை

## இந்திய இராணுவம் திரட்டுமாம்

கொழும்பு, நவ 8

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் பணிபுரிய உள்ளூர் வாசிகளைக்கொண்ட பரா இராணுவப் படை ஒன்றை இந்திய இராணுவம் அமைக்கும் என்றும், அப்படை இலங்கைப் பொலிஸாருக்கு உதவும் என்றும் 'சண்டே ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள இந்திய இராணுவ வட்டாரங்களின் படி, இந்த பரா இராணுவப் பிரிவை அமைக்க இந்திய இராணுவத்துக்கு இலங்கை அரசு அங்கீகாரமளித்து விட்டதாகவும் 'சண்டே ஐலண்ட்' செய்தி மேலும் தெரிவித்தது

பரா இராணுவப் பிரிவுக்கு பிரசைகள் படை (Citizens Force) என்று பெயரிடப்படும் எனவும்—

இது சம்பந்தமாக இலங்கை அரசு வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் 'சண்டே ஐலண்ட்' மேலும் தெரிவித்தது.

மட்டக்களப்பைச் சேர்ந்த 300 இளைஞர்கள் இப்புதிய படையில் சேர்க்கப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் என்று மட்டக்களப்பில் பிரமுகர்கள் மத்தியில் பேசிய இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இப் புதிய படையினர் ஊர்காவல் படையினர் போன்று செயற்படுவர். தமிழர்களே பெரும் பான்மையாக இருப்பர்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அந்தந்த இடத்தைச் சேர்ந்தவர்களே இப்படைக்குத் திரட்டப்படுவர் என்று சொல்லப்படுவதாகவும் 'சண்டே ஐலண்ட்' செய்தி மேலும் தெரிவிக்கிறது (உ-எ)

## சூட்டுக்கு இலக்கானர்

யாழ்ப்பாணம், நவ 8

நேற்று நண்பகல் மானிப்பாய் பகுதியில் தவறுதலாக வெடித்த அமைதிப்படையினரின் துப்பாக்கிக் குண்டுக்கு இலக்காகி ஒருவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் மலாகத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் நடராஜா [வயது 47] எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

## சிறைக்கைதி....

டனர்

அவர்கள் ஹெலிக்கொப்டர்களில் இருந்தும் தப்பிச்செல்ல முயன்ற கைதிகள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

நிலைமை கட்டுக்கடங்காமற் போகவே பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேறகொண்டனர்.

இதன் பின்னரே பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த சிறைக் காவலாளரை கைதிகள் விடுவித்தனர்.

எனினும் அதன்பின்னர் பிரதான கட்டடத்துக்கு கைதிகள் தீ வைத்தனர். இதில் சிக்குண்ட சிறைக் கைதிகள் சிலர் தீக்காயங்களுக்கு உள்ளானார்கள்.

அதிரடிக் கமாண்டோப் படைகள் உள்ளே நுழைந்து சரணடையும்படி எச்சரித்தும் கைதிகள் கேட்கவில்லை

அதன்பின்னரும் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இராணுவ வட்டாரத் தகவல்களின்படி 2 கைதிகள் உயிரிழந்தனர்; 20 பேர் காயமடைந்தனர்.

பொலிஸ் வட்டாரங்களின்படி 15 கைதிகள் உயிரிழந்தனர்.

சிறைத் திணைக்கள வட்டாரங்களின்படி 10 கைதிகள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

மூன்று சிறைக் கைதிகள் மட்டுமே கொல்லப்பட்டனர் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

இதனிடையில் —

சிறையில் இருந்த தச்சுத் தொழிற்சாலையைச் சூறையாடிய கைதிகள், அங்கு இருந்து எடுத்த ஆயுதங்களைக் கொண்டு சிறைக் காவலாளர்களைத் தாக்கினர் என்றும் இலங்கை வானொலி தெரிவித்தது.

## அப்'ரம்,.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரொட்டியில் எதிர்வரும் 17-ஆம் திகதிக்கு முன்னதாக வன்னியில் உள்ள சிங்கள மக்கள் தமது கிராமங்களைவிட்டு வெளியேற வேண்டும் எனவும் இதனை உதாசீனம் செய்தால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்குத் தாம் பொறுப்பல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

வன்னித் தமிழ் மக்களின் பெயரால் இந்தச் சுவரொட்டி வெளியிடப்பட்டிருக்கிறது. (உ-164)


## பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி கந்தசாமி கார்த்திகா (கவி)

ஆவரங்கால் புத்தூரைச் சேர்ந்த கந்தசாமி சாரதாமணி தம்பதிகளின் செல்வப் புதல்வி கார்த்திகா 8-11-1988 இன்று தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். கார்த்திகாவை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, சித்திமார், மாமன்மார், ஜேர்மன் மாமா, ஜேர்மன் சித்தப்பா, மச்சாள்மார், பெரியப்பா, பெரியம்மா, அத்தான்மார், அண்ணன்மார், அக்காமார், அத்தைமார் அனைவரும் பல கலைகளும் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றனர்.

[7824]

## ★ பிறந்த தின வாழ்த்து ★



### ⁂ பே. விக்னு ⁂

ஒந்தாச்சிமடத்தைச் சேர்ந்த பேரின்பமூர்த்தி கமலாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் விக்னு தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 08-11-1988இல் தனது இல்லத்தில், இல. 626/7 நாச்சிமார் கோவிலடியில் மிக விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை வாழ்த்துபவர்கள் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தியார், சித்தப்பாமார், மாமன்மார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் (பிரான்ஸ்), இராசலிங்க மாமா [குவைத்], சிறிமாமா ஆகியோர் விக்னுவை பல்கலைகளும் கற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(7961)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புனிதவதி பரமேஸ்வரன்

நானிலத்தில்: 04 - 05 - 1946
மேனிலத்தில்: 08 - 11 - 1987

பதினொன் காண்டுகள்
பதியெழல் அறியாப்
பாவையாகி எம்
குடும்பப் பொறுப்பைத்
தாங்கிய தெய்வம்...
ஒவ்வொரு வருடமும்
தீபாவளியை மகிழ்வுடன் அனுகினோம்
எண்பத்தேழு ஓ- அந்தத் தீபாவளி
இனி வரவே வேண்டாம்!
நீ மறைந்து ஓராண்டானது
பிஞ்சுக் குழந்தைகள் - என்
நெஞ்சைப் பிழிய
நீ மறைந்து ஓராண்டானதோ...
எத்தனை யுகங்கள் கடந்தாலும்
உன் அன்புப்பிணைப்புத்
தடங்களை மறவோம்

கணவன்,
பிள்ளைகள்.

பலாலி ரோட்,
திருநெல்வேலி.

(7957)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த ஆண்டு இறைவனடி சேர்ந்த
எங்கள் குலவிளக்கு

### திருமதி. புனிதவதி மார்க்கண்டு

போவாய் என நாம் நினைத்ததில்லை
புனிதவதி!
ஆ. ஆ! உன் நினைவு நெஞ்சில்
அகலா திருக்கிறதே!
தேவன் என என்னைப்
போற்றி வந்தாய் திருமகளே!
கூவி அழைக்கின்றோம்
நானும் குழந்தைகளும்!

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 'புனிதம்' நூல் வெளியீடும் இன்று (08-11-88 காலை 10 மணியளவில் எம் இல்லத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

மார்க்கண்டு குடும்பத்தினர்.

119, மெயின் வீதி,
யாழ்ப்பாணம். (7818)

## ஓராண்டு நினைவஞ்சலி



### Dr. கே. கணேசரட்ணம்

பிறப்பு: 8-8-1959
அழிப்பு: 21-10 1987

காலை எழுந்து கடமைக்குச் செல்கையிலே போகாதே! என்றேன் புறக்கணித்துச் சென்றாயே! நோயாளருக்கு நாம் தாயாவோம் ஆனதினால் போய்ப்பார்த்தல் கடன் என்று போனாயே என்மகனே! வீட்டு நாய் ஓடி வந்து விடாதுன்னைக் தடுத்து நிற்க சாட்டுக்குத் தட்டி விட்டு, தான் நடந்து சென்றாயே போய் மறையும் வரை உனது புறமுதுகைப் பார்த்தபடி தாயார் நான் நிற்கையிலே தயாகச் சென்றாயே உன்னையும் பின் காணவில்லை, உன் உடலையும் நான் காணவில்லை என்றாலும் என் மனசில் என்று முள்ளாய் என் மகனே.

அம்மா

54, விதானையார் வீதி
கண்டுக்குளி



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 08-11-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications(pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 8th November 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org